செ.வெ.எண்.882 நாள்.8.10.2010.

# செய்தி வெளியீடு – 8–10–2010

## தமிழகக் காவல் துறைத் தலைமை இயக்குநர் நியமனம்

## தமிழக அரசு விளக்கம்

தமிழகக் காவல் துறைத் தலைமை இயக்குநர் நியமனம் தொடர்பான சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சில நாளேடுகள் தங்கள் விருப்பம்போல் தலைப்பிட்டு வெளியிட்டுள்ளன. இது குறித்து தமிழக அரசு பின்வரும் விளக்கத்தை அளிக்கிறது:–

தமிழக காவல் துறைத் தலைமை இயக்குநர் நியமனத்தைப் பொறுத்தவரையில், உச்ச நீதிமன்றத்தின் வழிமுறைகளையே தமிழக அரசு பின்பற்றியுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளின்படி, இப்பதவிக்கான நியமனம் ஒரு தேர்வு நியமனமாகும் (Selection). இப்பணியிடத்திற்குத் தேர்வு செய்யும்போது, அந்தக் காலக்கட்டத்தில் தமிழகத்தில் பணியாற்றிடும் காவல் துறைத் தலைமை இயக்குநர் அந்தஸ்திலிருந்த அனைத்து அலுவலர்களின் பெயர்களும் பரிசீலிக்கப்பட்டு, அவர்களது பணித் திறன், அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் மாநிலக் காவல் துறை தலைமை இயக்குநர் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்த நியமனம் தேர்வு நியமனம் என்பதால், பணி மூப்பு (Seniority) அடிப்படையிலே மட்டும் செய்யப்படுவதில்லை.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள காவல் துறைத் தலைமை இயக்குநர் பதவியிடங்களுக்கு பட்டியல் தயாரிக்கும் பொறுப்பை உச்ச நீதிமன்றம் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) ஏற்றுச் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டுள்ள போதிலும்; இதனை நடைமுறைப்படுத்த மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம், மத்திய அரசின் வழிகாட்டுதல்கள் வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தைக் கோரியுள்ளது. ஆனால், உச்ச

நீதிமன்றமும், மத்திய அரசும் இது குறித்து உரிய ஆணைகள் எதையும் இதுவரை பிறப்பிக்கவில்லை. இந்த விவரங்களை மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை உயர் நீதிமன்றத்திலும் தனது பதில் உறுதி ஆவணத்திலும் சுட்டிக்காட்டியுள்ளது. இதுகுறித்து தமிழக அரசும் இரு முறை மத்திய அரசின் உள் துறை அமைச்சகத்திற்குக் கடிதங்கள் எழுதியுள்ளது. இந்த விவரத்தையும் தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் சென்னை உயர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு வழக்கின்போது கொண்டு வந்துள்ளார். மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் பட்டியல் தயாரிக்க இயலாத சூழ்நிலையில், தமிழகத்தில் அந்தக் காலக்கட்டத்தில் பணியாற்றிடும் அனைத்துக் காவல் துறைத் தலைமை இயக்குநர்களும் கருதப்பட்டு, திருமதி லத்திகா சரண் அவர்கள் தமிழக அரசால் காவல் துறைத் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். எனவே, உச்ச நீதிமன்றத்தின் வழிமுறைகளைக் கொஞ்சமும் வழுவாமல் தமிழக அரசு பின்பற்றி உள்ளது என்பது தெளிவு. சென்னை உயர் நீதிமன்றத்தின் முழுத் தீர்ப்பின் நகலைப் பெற்று, தீர்ப்பின் வாசகங்களை நன்கு ஆராய்ந்து, சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து, சட்ட ரீதியான உரிய நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ளும்.

* * * * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9